# குடியரசுப் பத்திரிகையும் இராமாயணப் போலி ஆராய்ச்சியும்.

(முன்மலர்த் தொடர்ச்சி.)

பாவல பண்டிதரை நாம் இப்பொழுது ஒன்று வினவுகின்றோம். அவர் "அநுமான் சீதையிடம் ஆண்குறி சிறிதாகவு மிருக்கும்" என்று கூறினதாக முதலிற் கூறிப்பின்பு, 'பின்புறம் விரல்கள் ஆண்குறி இவை நீண்டிருக்கும்' என்று கூறினதாக எழுதுகிறார். பாவல பண்டிதர் கூறுகிறபடி, ஸ்ரீராமபிரானது ஆண்குறி யிலக்கணத்தை அநுமான் கூறுவதானால், அவ்வாண்குறி சிறிது அல்லது நீளம் என்று கூறுவானே தவிர, ஓரிடத்தில் ஆண்குறி சிறியதென்றும் மற்றோரிடத்தில் ஆண்குறி நீண்டிருக்குமென்றும் கூறுவானா? பாவல பண்டிதர் சாவதானமாக ஆராய்ந்து விடைகூறுவாரென்று எதிர்பார்க்கிறோம்.

மேலும், ஒருவனைக்குறித்து ஒரு ஸ்திரீயிடம் இன்னான் விடபுருஷன் என்று கூறலாம். இதனால், அசப்பியம் யாதும் நேர்ந்திடவில்லை. இதற்கு உரை சொல்லவந்த ஒருவர், 'விடபுருஷன் என்றால் பொதுமகள் வீட்டிற் சென்று அவளுடைய இன்ன இன்ன அந்தரங்க உறுப்புக்களில் இன்ன இன்ன முறையில் அந்தரங்கமாகப் பழகுபவன்' என்று எழுதினால், இந்த உரையை வைத்துக்கொண்டு 'ஐயோ! மோசம் போயிற்று. இந்தவிதம் ஒருவன் ஒரு ஸ்திரீயிடம் பேசலாமா?' என்று கேட்பது எவ்வளவு அறியாமை. ஆகவே, வான்மீகி மகர்ஷி கூறிய இலக்கங்களுக்கு உரையாளர் கூறியதை வைத்துக்கொண்டு பாவல பண்டிதர் குற்றங்கூற முற்பட்டது சிறிதும் பயனற்றதாயிற்று. இனி, இங்கே கூறப்பட்ட இலக்கங்களுக்கு வேறும் உரை கூறலா மென்பதைப் பாவல பண்டிதருக்கு நினைப்பூட்டுகிறோம். அன்றியும் பாவல பண்டிதர்,

"பஞ்ச ஸஸ்வ: பஞ்ச தீர்க்க: ஸப்தாக்த: ஷடுந்நத:—த்ரிப்ரு
லகு ஸம்பிரோத்வாத்ரீம் சல்லக்ஷணஸ்த்விதி"

என்ற அகஸ்திய மகர்ஷி கூறிய ஸூரிய சாமுத்திரிக லக்ஷணம் அறிவாரா என்று கேட்கிறோம்.

பாவல பண்டிதர் இங்கே இருந்து கிஷ்கிந்தைக்குச் சென்றார். அவர்,

'இதனை மேலும் சிந்தித்தால் இராமன் சீதையினுடைய கொங்கை குறிகளைப் பற்றி விவரித்திருக்க வேண்டும். இல்லையென்றால், கம்பர் இராமன் வாக்கால் அவைகளை அனுமானுக்கு உரைத்ததாக ஏன் விவரித்திருக்க வேண்டும்? கம்பர் காலத்துப் பிரதிகளில் அவ்விவரிப்புக்கள் இருந்திருக்க வேண்டும்?' என்று எழுதி யிருக்கிறார்.

இராமாயண கதாநாயகன் ஸ்ரீராமபிரானே யாதலால், வால்மீகி மகாகவி கதாநாயகனது தேக சௌந்தரியத்தைச் சாமுத்திரிகா லக்ஷண வாயிலாக வெளியிட்டார். புலவர் பெருந்தகையாகிய கம்பரோ ஒரு சார் வைஷ்ணவாசாரியர்கள் இராமாயண மென்னுஞ் சொற்றொடரை இராமா—அயனம் என்று பிரித்துச் (சிறையிருந்தாளாகிய) சீதையினது ஏற்றம் சொல்லும் நூலெனப் பொருள் பண்ணுவதால், அந்த அபிப்பிராயத்தையுந் தழுவி நாடவிட்ட படலத்தில் காவிய நாயகியாகிய சீதாபிராட்டியினது தேக சௌந்தரியத்தை இராமபிரானது வாயிலாக வெளியிட்டார்.

பாவல பண்டிதர் தமது கட்டுரையில் பல இடங்களில் வால்மீகி கூறியதைக் கம்பர் கூறாதொழிந்தாரென்றும், கம்பர் கூறியன வெல்லாம் வால்மீகி கூறாதனவே யென்றும் எழுதியிருக்கிறார். இந்த அறிவை இங்கும் நீளச் செலுத்தி நாடவிட்ட படலத்தில் கம்பர் சீதையைப் பற்றி வர்ணிப்பன வெல்லாம் கிஷ்கிந்தா காண்டத்து 44-வது சர்க்கத்தில் வால்மீகி மகர்ஷி கூறாதனவே என்று அப் பாவல பண்டிதர் அறிந்து கொள்ளலாம். அதை விடுத்து அவர் 'கம்பர் காலத்துப் பிரதிகளில் அவ்விவரிப்புக்கள் இருந்திருக்க வேண்டு' மென்று பகற்கனாக் காண்கின்றார். அவரது கனவுலக நிகழ்ச்சி இன்னும் எவ்வளவு தூரம் செல்கின்றதென்று பார்ப்போம்.

பாவல பண்டிதர்,

'இதனை மேன்மேலும் ஆராய்ந்தால் ஆரியர் அக்காலத்தில் பல சமயங்களில் உடையில்லாமலிருந்திருப்பார் போலும்' என்று எழுதுகிறார்.

வடமொழி நூலில் எந்த நூலிலும் ஆரியர் உடை யில்லாதிருந்தமை கூறப்பட வில்லை. தமிழ்நூலிலும் ஆரியர் உடையில்லாதிருந்தமை கூறப்படவில்லை. சரித்திரகால எல்லைக் குட்பட்ட எந்த

காலத்திலும் ஆரியர் உடையுள்ளவராகவே காணப்படுகின்றார். புராண காலங்களிலும் அவ்வாறே; அப்படியிருக்கப் பாவலபண்டிதருக்கு மட்டும் இந்த நிர்வாணக் காட்சி உருவெளித் தோற்றம் எங்கிருந்து உதயமாயிற்று என்றுதான் நாம் கேட்கிறோம்.

பாவல பண்டிதருடைய பகற்கனா இதனோடு முடிந்தபாடில்லை. அவர்,

'அநுமான் நான் இராமனுக்கு மிகவும் அந்தரங்கமானவன் என்று கூறுகிறபடி இராமனுக்கு மிகவும் அந்தரங்கமானவனாய் அவனுடைய அந்தரங்க உறுப்புக்களின் பழக்க முடையவனாய் இருந்திருக்க வேண்டும்; இல்லையென்றால் அவைகளைப்பற்றி அநுமான் மாறி மாறி அவைகளின் தன்மைகளைச் சீதைக்கு எவ்வாறு விவரமாக எடுத்தியம்பியிருக்க முடியும்? தசரதனைப் போல அநுமானும் இராமனிடம் பழகினன் போலும்' என்று எழுதுகின்றார்.

முன்பு நாம் வால்மீகி ராமாயணத்திலிருந்து எடுத்துக் காட்டிய சுலோகங்களில், பாவல பண்டிதர் கூறுகிறபடி அந்தரங்க உறுப்புக்களின் பெயர்களே இல்லாமையால், பாவல பண்டிதர் 'அவைகளின் தன்மைகளைச் சீதைக்கு எவ்வாறு விவரமாக எடுத்தியம்பியிருக்க முடியும்?' என்று யூகித்துக் கேட்பது எவ்வளவோர் அறியாமை.

இனி, ஒருவருக்கு ஒருவர் அந்தரங்கமானவர் என்றால், அவ்வொருவர் மற்றொருவருடைய அந்தரங்க உறுப்புக்களில் பழக்கமுடையவராயிருத்தல் வேண்டுமென்று நாம் யூகிக்கலாமா? அவ்விதம் அயோக்கியமாக நாம் யூகித்தால் நம்மை அறிவுடைய மக்களாக உலகம் கொள்ளுமா என்றுதான் நாம் பாவல பண்டிதரை வினவுகின்றோம்.

அன்றியும், பாவல பண்டிதர் இன்னொரிடத்து இன்னவாறு மணஞ்செல்லும் என்னும் நியதியை அறிந்திருப்பாரென்று நாம் நம்புகிறோம். ஒருவருக்கு ஓர் பெண் குழந்தை இருந்ததாக வைத்துக்கொள்வோம. அவர் அக்குழந்தையோடு கொஞ்சிக் குலாவுவாரா? மாட்டாரா? குலாவமாட்டாரென்றால் அவர் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவரல்லர். கொஞ்சிக் குலாவுவரென்றால் * 'மாங்காட்டு

---

* "மாங்காட்டு வேளான் மகளை மருமகன்பாற்
போங்காட்டி யின்பம் புணர்ந்தானே-யாங்கானு
மக்கண்மெய் தீண்டலுடற் கின்பமற்றவர்தஞ்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு" என்ற செய்யுளின் விஷயம்.

வேளா'னைப்போல மெய்தீண்டி இன்பம் பெறுவாரா 'பெற்றுரென்று நாம் யூகிக்கலாமா' என்று நாம் பாவல பண்டிதரைக் கேட்கின்றோம். மாங்காட்டு வேளாளனுடைய மனநிலை அவருக்கு இல்லையென்றால், ஒரு பாலராயினும் மனைவி பாலன்பும் மகள்பால் அன்பும் வேறுதல் அறிந்த நாம், வேற்றுப்பாலாகிய மகன்பால் அன்பும் வேறுதல் வேண்டுமென்று அறியாதிருந்தால், அந்த நிலைமை மிகவும் இரங்கத்தக்க தன்றோ? இதனால், தசரத சக்ரவர்த்தி ஸ்ரீ ராமபிரானிடம் காட்டிய வாத்ஸல்யத்தைப் பாவல பண்டிதர் எள்ளி நகையாடியது எவ்வளவு அசம்பாவிதமா யிருக்கிறது?

இனிப் பாவல பண்டிதருக்கு இன்னுரை இன்ன காலத்தில் கௌரவிக்க வேண்டுமென்ற நியதி தெரியவருமென்று நாம் எண்ணுகிறோம். அநுமான் ஸ்ரீராமபிரானுக்கு வேலையாள். அவன் பிராட்டியைத் தேடும் பொருட்டுத் தென்றிசைக்கு அனுப்பப்பட்டவன். அவன் இலங்கை சென்று சீதாபிராட்டியைத் தேடிக் கண்டு வந்து ஸ்ரீராமனிடம் தெரிவித்தான். தேவி இருக்குமிடம் தெரியாதிருந்த ஸ்ரீராமபிரான் அநுமான் செய்து முடித்த காரியத்திற்கு மகிழ்ந்து அவனைத் தழுவினன். இது, 'வினையாளை வேலை முடிவில்' என்பதற்குப் பொருத்தமா யிருக்கிறது. இவ்வாறு வால்மீகி பகவான் கூறவும், பாவல பண்டிதர் ஏதேதோ தம்மனங் கொண்டவாறு அநுமானைப் பற்றியும் ஸ்ரீராமபிரானைப் பற்றியும் எழுதுகிறார். இதற்குப் பாவல பண்டிதரும் அவர் அறிவும் ஆராய்ச்சியும் பழக்கமுந்தான் பொறுப்பே யன்றி வேறு யாதும் இல்லை. பாவல பண்டிதர் வடமொழியை நல்லாசிரியரை யடுத்துக் கற்று வால்மீகி ராமாயண முழுவதும் பூர்வாசாரியர்கள் வரம்பில் நின்று படித்து உண்மை யுணருமாறு நாம் அவர்க்கு அறிவுறுத்துகிறோம்.

இனிப் பாவல பண்டிதர் அநுமானது பிறப்பைப் பற்றி எழுதும் பொழுது,

'அநுமான் தனது தாய் அஞ்சனை காற்றரசனோடு தன் தந்தையாகிய கேசரி ஊரிலில்லாதபோது விபசாரத்தனஞ் செய்து தன்னைப் பெற்றுளென்று உண்மையைக் கூறுகின்றன்........அது ஆரியருள் இயற்கை போலும்' என்று எழுதுகிறார்.

பாவல பண்டிதரோ வடமொழி ஞான மில்லாதவ ரென்று முன்னமே சொன்னோம். அவர் வால்மீகி ராமாயணத்தின் தமிழ் மொழி பெயர்ப்பையேனும் சரியாய்ப் படித்திருப்பாரோ என்றுதான் நாம் சந்தேகப்படுகிறோம். அத்தமிழ் மொழி பெயர்ப்பில்

கிஷ்கிந்தா காண்டம் 66-வது சர்க்கத்தைப் பாவல பண்டிதர் இப்பொழுது ஒரு தரம் படித்தால் உண்மை தெரிந்து கொள்ளலாம். அஞ்சனாதேவி யாதொரு குற்றமும் செய்யாதவளா யிருக்க அவள் மீது குற்றம் சுமத்துவது தகுமா என்று நான் நாம் பாவல பண்டிதரைக்கேட்கிறோம்.

இன்னும் பாவல பண்டிதர்,

'அது ஆரியருள் இயற்கை போலும்' என்று எழுதுகிறார்.

பாவல பண்டிதர் மணிமேகலை யென்னும் தமிழ் நூலையேனும் வரன்முறையாகக் கற்றிருந்தால் இவ்விதம் எழுதத்துணிந்திரார். மணிமேகலையில் வரும் மருதி, விசாகை இவர்கள் தமிழ்நாட்டுப் பெண்களே. இவர்களுடைய வரலாற்றோடு அஞ்சனா தேவியின் வரலாற்றையும் ஒப்பு நோக்கி உண்மை உணருமாறு பாவல பண்டிதருக்கு நாம் அறிவுறுத்துகிறோம்.

இனிப் பாவல பண்டிதர் 36-வது சர்க்கத்தை ஆராய்ந்த வைபவத்தைக் கவனிப்போம். அநுமான் கொடுத்த மோதிரத்தைக் கண்டு சீதை மகிழ்ந்தா ளென்று எழுதும்போது,

'சம்போக காலங்களில் இராமனுக்கும் தனக்கும் நேரிடும் சச்சரவுக்காலங்களில் இருவரும் பேசாமலிருக்க இராமன் மெல்ல அதைக்கீழே நழுவவிடத் தான் எடுத்துக் கொடுத்து முகத்தான் அவனோடு பேசி ஊடல் தீர்ந்த சமயங்களை அவள் எண்ணினாள்'

என்று பாவல பண்டிதர் எழுதுகிறார்.

பாவல பண்டிதரோ வடமொழி ஞான மில்லாதவர் என்று முன்னரே தெரிந்திருக்கிறோம். வடமொழி ஞானம் வாய்ந்த ஓர் பண்டிதரிடம் சென்று வணங்கி நின்று தாம் மேலே சொல்லிய விஷயம் வால்மீகி ராமாயணத்திற் சொல்லப்படாமையைத் தெரிந்து கொள்வாராக. 'எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்; படித்தவன் பாட்டைக் கெடுத்தான்' என்ற பழமொழி இந்தப் பாவல பண்டிதருக்குக் கிடைத்த தமிழ் மொழிபெயர்ப்புப் புஸ்தக விஷயத்திலும், பாவல பண்டிதருடைய யூக விஷயத்திலும் முற்றிலும் உண்மையாய் விளங்குகின்றது. இனியேனும், பாவல பண்டிதர் ஆழம் அறிந்து காலை இடுவாராக.

இனிப் பாவல பண்டிதர்,

'இராமன் இப்போது கட்குடியையும் புலாலுணவையும் விட்டு விட்டா னென்று கூறுகிறான் அநுமான். இதனால், நாம் முன் எடுத்துக் காட்டியபடி இராமன் புலாலுண்டலோடு கட்குடியு முடையா னென்பது நிலை பெறுகிறது' என்று எழுதுகிறார்.

புலாலுண்ணுதலும் கட்குடித்தலும் அரசர்களுக்கு விலக்கப்பட்டனவல்ல என்பது பாவல பண்டிதருக்குத் தெரிந்திருந்தால் அவர் இவ்வாறு எழுதத் துணியார். வடமொழி நூல்கள் பாவல பண்டிதருக்குத் தெரியாவாகையால், அவருக்குத் தமிழ் நூல்களிலிருந்து மட்டும் சில பிரமாணங்களை எடுத்துக் காட்டுகிறோம்.

புறநானூறு என்பது சங்கம் மருவிய நூல்களில் எட்டுத்தொகையில் ஒன்று. அந்நூலில் 235-வது செய்யுள், நரைமூதாட்டியாகிய ஒளவை, சேர நாட்டரசனுடைய உறவினனாகிய அதிகமான் நெடுமானஞ்சி என்னும் அரசனைப் புகழ்ந்து பாடியது' அச்செய்யுளில் ஒளவை,

"சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே, பெரியகட் பெறினே, யாம்பாடத் தான் மகிழ்ந் துண்ணுமன்னே"

என்று கூறுகிறாள். இதன் பொருள்:— கொஞ்சமாகக் கள் கிடைத்தால் எங்களுக்குத் தருவான். அது போயிற்றே: அதிகமாகக் கள் கிடைத்தால் அதனை யாங்கள் உண்டு பாட, எஞ்சிய கள்ளைத் தான் விரும்பி உண்ணுவான். அது போயிற்றே என்பது; இதனால், அக் காலத்தில் தமிழ் நாட்டு அரசரும் கட்குடியுடையாரென்பது விளங்குகின்றதன்றோ? அது மாத்திரமா, தமிழரசர்கள் தாங்கள் கட் குடிப்பதோடு மட்டும் நில்லாமல் தம்மிடம் வருபவர்களுக்கும் அதனை வழங்கினவர்களென்பதும் தெரிகின்றதன்றோ? மேலே காட்டிய செய்யுளில் பிரஸ்தாபிக்கப்பட்ட அதிகமான், கடைஎழு வள்ளல்களில் ஒருவன். இந்த விஷயம் பாவல பண்டிதருக்குத் தெரியுமா என்று கேட்கிறோம்.

இன்னும், பத்துப் பாட்டு என்பதும் சங்கம் மருவிய தொகை நூல்களில் ஒன்று. அதில், கரிகாற் சோழனது புகழ்ச்சியைக் கூறும் பாட்டில்,

'பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர, வைகல் வைகல் கைகவி பருகி' என்பது சொல்லப்படுகிறது.

இதன் பொருள்:—தீம்பூ நாறுகின்ற கள்ளின் தெளிவை மேலும் மேலும் வார்த்துத் தர, நாடோறும் நாடோறும் கள் கடுமை மிகுதி யுடைமையாற் கையைக் கவித்துச் சிறிது போதும் என்று சொல்லிக் குடித்து என்பதாம். இதனால் சோழன் கரிகால் வளவன் தன்னிடம் வரும் புலவர்க்கு அதிகநாள் ஊற வைத்த கள்ளைக் கொடுத்தமை விளங்குகிறதல்லவா?

மேலும், அப் பத்துப் பாட்டில் ஏறுமா நாட்டு நல்லியக் கோடன் புகழ்ச்சியைக் கூறும் பாடலில்,

'பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்கி'*

என்பது சொல்லப்படுகிறது. இதன் பொருள்:—பாம்பு ஏறி மயக்கினார் போல அறிவை மயக்கின கள்ளின் தெளிவைத் தந்து என்பதாம். இதனால், நல்லியக் கோடனும் தன்பால் வரும் புலவர்க்கு அறிவை மயக்கும் கள்ளை யுண்பித்தமை தெரிகின்றதன்றோ?

இனிப் புலாலுணவைப் பற்றி நாம் ஆராய்வோம். அப் பத்துப்பாட்டிலே தொண்டைமானிளந்திரைய னென்னும் காஞ்சிபுரத்து அரசன் புகழ் கூறுமிடத்து,

'கொடுவாள் கதுவிய வடுவாழ் நோன்கை, வல்லோ னட்ட பல்லூன் கொழுங்குறை * * * ஆறு விருப்பிற்றானின் றூட்டி'

என்பது கூறப்பட்டது. இதன் பொருள், வளைந்த அரிவாளைக் கொண்ட வடு அழுந்தின வலிய கையை யுடைய சமையற்காரன் பக்குவப்படுத்திய பல இறைச்சியிற் கொழுப்புடைய தசைகளை........ அமையாத ஆசையுடனே தான் நின்று உண்ணப் பண்ணுவித்து என்பதாம். இதனால், தமிழ் நாட்டு அரசரது புலால் உணவு வெளிப்படுகின்றதன்றோ?

மேலே காட்டிய பிரமாணங்களால் தமிழ் நாட்டிலும் அரசர்க்குக் கட் குடியும் புலாலுணவும் உண்மை தெரிந்து, அவ்விரண்டும் அரசர்கட்கு விலக்கப்பட்டனவல்ல என்று பாவல பண்டிதர் உணர்வாராக. இதனால், ஸ்ரீ இராமபிரானுக்கு அவ்விரண்டு உணவுகளால் யாதோர் இகழ்ச்சியும் உண்டாக வில்லை. அப்பிரான் அவற்றை நீக்கினமை அவனுக்குப் புகழ்ச்சியே யாயிற்று.

இனிப் பாவல பண்டிதர் கம்பராமாயணத்தை ஆராய்ந்த முறையை விசாரிப்போம். இந்த விசாரணையை நாம் தொடங்கும் முன் பாவல பண்டிதருடைய தமிழிலக்கண விலக்கிய அறிவையும் ஆராய்ச்சி யறிவையும்தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. இவ்வாராய்ச்சியினால், பாவல பண்டிதரிடம் கம்பராமாயணத்தை ஆராய்ச்சி செய்வதற்குரிய தகுதி இருக்கிறதா இல்லையா என்று நாம் தெரிந்து கொள்ளலாம்.

பாவல பண்டிதர் தாம் பாடிய பாட்டு ஒன்றில்,

'தம்மின் மிக்காரில் தன்மையன்'

என்று பாடியிருக்கிறார்.

பாவல பண்டிதர் இங்கே சொல்லக் கருதியது 'தன்னை விடச் சிறந்தவர்கள் இல்லாத தன்மையை யுடையவன்' என்பது. 'தன்மையன்' என்ற ஒருமைக்கு ஏற்பத் 'தன்னின்' என்று சொல்ல வேண்டும். இங்கே பாவல பண்டிதர் மயக்கங் கொண்டு பாடி விட்டாரென்றுதான் நாம் நினைக்கிறோம். பாவல பண்டிதரும் அதற்கு உடன்படுவாரென்று நம்புகிறோம்.

மேலும், பாவல பண்டிதர் பாடிய மற்றொரு பாட்டில்,

'மாதவ காண்மினென்றே கதறி யுருகுமே'

என்று பாடியிருக்கிறார்.

இங்கே பாவல பண்டிதர் சொல்லக் கருதியது, 'மாதவனே! எங்களை உன்னுடைய கருணைக் கண்ணாற் பார்த்தருளென்று கதறி உருகுங்கள்' என்பது. இங்கே, 'மாதவ' என்னும் ஒருமை விளிக் கேற்ப, 'காண்' என்னும் ஒருமை வினை முற்று வருதல் வேண்டும். 'காண்மின்' என்பது பன்மை வினை முற்று. பாவல பண்டிதர் இச்செய்யுளிலும் மயக்கங் கொண்டார். செய்யுள் தோறும் மயக்கங் கொள்ளும் இப்பாவல பண்டிதர் எந்நூற் செய்யுளிலும் மயக்கங் கொள்வாரென்பது புலப்படுகின்றதன்றோ?

இனிப் பாவல பண்டிதருடைய ஆராய்ச்சி முறையைச் சிறிது ஆராய்வோம். 'விதவை மணம்' என்ற நூலுக்கு இந்தப் பாவல பண்டிதர் முகவுரை எழுதியிருக்கிறார். அதில் அவர்,

'தான் வேறொருத்தியை விரும்புகிறவன், தன் மனைவியும் வேறொருவனை விரும்ப இடந்தர வேண்டும். காம இன்ப உணர்ச்சி ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானது தானே'

என்று எழுதுகின்றார்.

பாவல பண்டிதருக்கு, ஒருவன் தன் மனைவி யல்லாத மற்றொருத்தியை விரும்புவது தக்கது என்று கூறினவர் யார்? தகாத ஒன்றைத் தக்கதாகக் கொள்ளும் தூர்த்த நிலையில் நின்று கொண்டு வியவகாரம் செய்வது அழகாகுமா? என்று நாம் பாவல பண்டிதரைக் கேட்கின்றோம்.

மேலும், பாவல பண்டிதர் 'உள்ளுவ தெல்லா முயர்வுள்ளல்' என்பதை மறந்தார் போலும்.

'சொல்லுதல் யார்க்குமெளிய வரியவாஞ், சொல்லிய வண்ணஞ் செயல்' என்பதும்,

## 'Example is better than precept'

சொல்லுதலைவிட நடந்து காட்டல் நல்லது என்பதும்.

நமக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகத்திற்கு வருகின்றன.

அன்றியும், அம்முகவுரையில் பாவல பண்டிதர்,

'கிழவியை மணந்த சிறுவன் சிறுபெண்களைச் சேர விரும்புதல் போலத்தானே' என்று எழுதுகின்றார்.

நமது நாட்டில் எந்தக் கிழவியை எந்தச் சிறுவன் மணந்ததுண்டு என்று பாவல பண்டிதரைக் கேட்கின்றோம். இல்லாத ஒன்றை இருப்பதாக வைத்துக்கொண்டு வியவகாரம பண்ணினால் எந்த உண்மை விளங்கும்?

இவ்வளவில் பாவல பண்டிதருடைய தமிழறிவையும் ஆராய்ச்சி முறையையும் பற்றிய விசாரணையை நிறுத்திவிட்டு, இனி அவர் கம்பராமாயணத்தை ஆராய்ந்த முறையை விசாரிப்போம்.

பாவல பண்டிதர் 'இனிக் கம்பர் புரட்டை வெளிப்படுத்துவாம்' என்று எழுதுகிறார்.

பாவல பண்டிதருக்குக் காவியங்களின் தன்மையும் மகாகவிகளின் மனோபாவங்களும் தெரியவருமா? என்று நாம் கேட்கிறோம். ஓர் அரசனது அரண்மனை மயிர்வினைஞன் சிறிது சிறிதாக பொருள் சேர்த்து எலுமிச்சம் பழத்தின் அளவு பொன் வைத்திருந்தான். ஒரு நாள் அம்மயிர்வினைஞன் தனக்குத் தொழில் செய்யுங் காலத்தில் அரசன் அவனிடம் 'நம் நாட்டு மனிதர்கள் எவ்வாறு இருக்கிறார்கள்?' என்று கேட்டான். மயிர் வினைஞன் அதற்கு விடையாக, மகாராஜாவே! எவ்வளவு ஏழையானாலும் எலுமிச்சம பழத்தளவு பொன் இல்லாதவன் தங்கள் நாட்டில் இல்லை' என்றான். அரசன் இங்ஙனம் மயிர்வினைஞன் கூறியதை மனத்திற்கொண்டு ஆராய்ந்து அதன் காரணத்தை உணர்ந்து ஒரு நாள் நள்ளிரவிலே அம்மயிர் வினைஞன் சேர்த்து வைத்த பொன்னைப் பிறர் கவருமாறு செய்தான். மற்றை நாள் மயிர் வினைஞன் அரண்மனைத் தொழில்புரிய வந்த காலத்து அரசன் அவனிடம் 'நமது பிரஜைகள் எங்ஙனம் வாழ்கின்றார்கள்?' என்று வினவினான். அப்பொழுது மயிர் வினைஞன் அரசர் பெருமானே! நாட்டிலே கள்வர் மிகுந்து விட்டனர். யாரிடமும் எலுமிச்சம் பழத்தளவு பொன்னும் இல்லை' என்று விடை கூறினான். இஃது ஓர் கர்ன பரம்பரக்கதை. இக்கதையில் வரும் மயிர் வினைஞனது மனோபாவமும், (Men judge others by

themselves) மனிதர்கள் தங்களை வைத்தே பிறரைத் தீர்மானிக்கின்றனரென்னும் பழமொழியும், இப்பண்டிதர் விஷயத்தில் நமது நினைவுக்கு வருகின்றன.

இனிக் கம்பரைக் குறை கூற மூற்பட்ட பாவலர் 'வால்மீகி கூறிய படி குறிகளையும் விதைகளையும் மாறி மாறி விவரிக்காமல் விட்டு விட்டார் கம்பர்' என்று எழுதுகிறார்.

ஆ! சம்புவே என்ன புத்தி!! வால்மீகி பகவான் குறிகளையும் விதைகளையும் பிரஸ்தாபிக்கவேயில்லை யென்பதை நாம் முன்னரே எழுதியிருக்கிறோம். அப்படி அவர் கூறாத குறிகளையும் விதைகளையும் பாவல பண்டிதர் பல முறை ஓதுகிறார். இவ்வாறு கம்பர் ஓதாதது ஓர் குற்றமாகுமா? பாவல பண்டிதர் ஓத விரும்பினால், அவர் அவற்றை ஓதிக்கொண்டே யிருப்பாராக.

இனிச் சீதையினுடைய அந்தரங்க உறுப்புக்களைக் கூட விவரித்த கம்பருக்கு இவைகளை (ஆண்குறியையும் விதைகளையும்) விவரிக்கத்தோன்றாமை வியப்பே' என்று பாவல பண்டிதர் எழுதுகிறார்.

பாவல பண்டிதர் சீதையினுடைய அந்தரங்க உறுப்பு என்று கருதியது சீதா பிராட்டியது ஜனனேந்திரியந்தானே. கம்பர் இவர் கருதுகிறபடி ஜனனேந்திரியத்தை எங்கும் விவரிக்கவில்லை. பிராட்டியினுடைய ஜனனேந்திரியத்தைக் கம்பர் விவரித்த செய்யுளைப் பாவல பண்டிதர் எடுத்தெழுதுவாரா என்று நாம் வினவுகின்றோம்.

பாவல பண்டிதர் சீதையின் அந்தரங்க உறுப்பைக் கம்பர் விவரித்ததாகக் கருதியது 'காடுவிட்ட படலத்தில் வரும் சீதாபிராட்டியின் அல்குல் வர்ணனையைக் கண்டுதான் இருத்தல் கூடும். அப்படி யிருந்தால் 'யானை யெருத்தம் பொலிய' என்ற நாலடியார்ச் செய்யுளிலே வரும் எருத்தம் என்பதற்கும், பொலிய என்பதற்கும் மெய்ப்பொருள் தெரியாத சட்டம பிள்ளையின் நிலைமையிலும் மாணாக்கன் நிலைமையிலுந்தான் பாவல பண்டிதர் நிற்கிறார். அல்குல் என்றபதத்திற்குச் செம்பொருள் அக்குறும் பொத்தியா? சீதாபிராட்டியின் அல்குலைக் கம்பர் வர்ணித்ததால், அவர் சீதாபிராட்டியின் அந்தரங்க உறுப்பை வர்ணித்தாரென்று கருதினால், நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் ஸ்ரீராமபிரானது அல்குல் விவரிக்கப் பட்டதைப் பார்த்தவுடனே 'அந்தக் காலத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்குரிய குறியிருந்திருக்கவேண்டும்; அல்லது இவ்வாறு பாடியவர் ஆண்பெண் வித்தியாசம் அறியாதவரா யிருந்திருக்க வேண்டும். வைஷ்ணவர்களும் தமிழ்ப்பாஷை யுணர்ச்சி யில்லாமல் அந்தப் பாசுரத்தை ஓதி வந்திருக்கவேண்டும்.' என்றெல்லாம்

யூகிக்க வேண்டி வருமே. அவ்வித யூகம் பொருத்தமா? நடுவு நிலைமையிலிருந்து உண்மை தெரிய விரும்பினால், கம்பர் சீதையின் அல்குலை வர்ணிக்கிறார். நாலாயிர திவ்யப் பிரபந்தக்காரர் ஸ்ரீராமபிரானுடைய அல்குலை வர்ணிக்கிறார். ஆகையால், அல்குலென்பது முன் தவறுதலாக எண்ணியிருந்த பெண்ணின் அந்தரங்க வுறுப்பன்று. பின், ஆண் பெண் என்னும் இருபாலர்க்கும் பொதுவாகிய கண் காது கை கால் போன்ற ஓர் உறுப்பென்று உணரலாம். திவாகரம் நிகண்டு மட்டும் படித்தவர்கள் கூட இதனை அறிந்திருப்பார்கள். திவாகரத்திலும் நிகண்டிலும் அவயவங்களின் பெயர்களைத் தனித்தனி சொல்லி வரும்பொழுது தலையின் பெயர், கண்ணின் பெயர், கழுத்தின் பெயர், ஆண் குறியின் பெயர், பெண் குறியின் பெயர், அல்குலின் பெயர் என்று வேறு வருதலால் அல்குல் என்பது ஆண்குறி, பெண்குறி யிவற்றின் வேறான அவயவமென்பது தெரியலாமே. பாவல பண்டிதர் அல்குலைப் பற்றிய முழு விவரமும் தெரிய விரும்பினால், மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்று வெளிவரும் செந்தமிழ்ப் பத்திரிகை இருபதாம் தொகுதியில் பக்கங்கள் 225,226 பார்த்து உண்மை தெளிவாராக.

இனி, அன்பர்களிட மிருந்து வந்த பொருளை அன்பு மிகுதியால் முகத்தோ டணைப்பதும் மார்போடணைப்பதும் சர்வ சாதாரணமான விஷயங்களாம். அந்த இயற்கையைத்தான் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரும் சீதாபிராட்டியின் நிலையுணர்ந்து 'வாங்கினள் முலைக்குவையில் வைத்தனள்' என்று கூறினார். நெடுங்காலம் தன் நாயகனைப்பற்றி யாதொரு செய்தியும் தெரியாதிருந்த பிராட்டி, ஆழியைப் பெற்ற காலத்து அடைந்த மன நிலையைக் கம்பர் 'மோக்கும் முலைவைத் துறமுயங்கும்' என நிகழ்வது நிகழுமாறு கூறினார். கரும்பின் உருசி யறியாது கரும்பை இகழ்ந்தால், கரும்பு கசந்தாவிடும்? காதல் அன்பும் அந்த அன்பால் நிகழும் நிகழ்ச்சியும் மனோபாவமும் அறியாத ஒருவர் அவற்றை உள்ளன உள்ளவாறே கூறிய கம்பரை இகழ்வது தகாது. மேலும் பாவல பண்டிதர் 'முத்த நகையாள் விழியினொளி முலை முன்றில், தத்தியுக' என்று புலவர் பெருந்தகை கூறுகின்றார்—என்று கம்பரை நகையாடுகிறார். ஒரு ஸ்திரீக்குக் கண்ணிலிருந்து கண்ணீர் வருமானால், அக் கண்ணீர்ப் பெருக்கு அவள் முகத்தில் இரு கன்னங்களிலும் வார்ந்து அவள் மார்பிலே விழாதா? பாகற்காய் என்று சொல்லிவிட்டால் பத்தியம் முறிந்து விடுமா? முலை என்று சொல்லிவிட்டதால் குடி கெட்டுப் போய்விட்டதா? மருத்துவ கலாசாலையிற் கற்கும் மாணவர்களுக்கு அந்தரங்க வுறுப்புக்களின் பெயர்கள் சொல்லப் படுவதால் ஏதேனும் விபரீத வுணர்ச்சி யுண்டாகுமா? உண்டாகாதே. அதுபோலக் காவியங்களிற் பழகுதற்குரிய தகுதியுடைய

வர்களுக்கு இச்சொல் யாதொரு தீய உணர்ச்சியையும் உண்டாக்காது. மெற்றிக்குலேஷன் தமிழ்ப்பாடப் புத்தகத்திற் கூட முலையென்னுஞ் சொல் யாதொரு குற்றமுமில்லாத சொல்லெனக் கருதிச் சென்னைக் கல்வியிலாகா சங்கத்தார் துணிந்து அதனை நீக்காமல் அச்சிட்டிருக்கிறார்களே. சந்திர சேகரப் பாவலராகிய திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை தமிழ்ப்பண்டிதரா யிருக்கும் நிலையில் அதனை எங்ஙனம் அறியா தொழிந்தாரென்று நாம் வினவுகிறோம். அச் சங்கத்தாரினும் சிறந்த அறிவுடையார் ஒருவர் ஒருகால் முலையென்னுஞ் சொல் தவறுதலுடைத் தென்று கூற முற்படுவர் போலும்.

இனிப், பாவல பண்டிதர் 'கம்பர், சீதையை நோக்கி, அனுமான்—வம்பின் முலையாய்—என்று விளித்ததாகக் கூறுகின்றார். இது மிகவும் வியப்பே. தாய் முறை எனக் கூறப்பெறுஞ் சீதையை மகன் முறையானான அனுமான் இவ்வாறுதான் அழைத்தல் வேண்டும் போலும். என்னே! இவ்வொழுக்க முறை யிருந்தவாறு' என்று எழுதுகிறார்.

'வம்பின் முலையாய்' என்பது சீதையைக் குறிப்பதென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆனால், அச் சொற்றொடர் சீதாபிராட்டியை எவ்வாறு குறிக்கிறதென்பது தான் ஆராய்ச்சி. பாவல பண்டிதர் யாதோ ஒரு கம்பராமாயண வுரைப் புத்தகத்தைப்பார்த்து விட்டு—வம்பின் முலையாய்—என்பதற்குக் கச்சு அணிந்த முலையுடையவளே! என்று பொருள் பண்ணுகிறாரென்று நாம் நினைக்கிறோம். பாஷைதனிற் சிறந்த ஞானமும் காவியங்களிற் சிறந்த பழக்கமும் நடுவு நிலைமையுமுள்ள வித்துவான்கள்—வம்பின் முலையாய் என்பதற்குக் கொள்ளும் பொருள் வேறு.

அநுமான் சீதாபிராட்டியைத் தன் தாயென்றே கருதினான். இங்கும் தாயென்றே அழைக்கின்றான். அப்பிராட்டி கொடிய அரக்கனாகிய இராவணனாலே எவ்வளவோ துன்புறுத்தப்பட்டும், 'உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று' என்பதைக் கடைப்பிடித்துத் தன் கற்பினைக் காத்து வருகின்றாள். இவ்விதமான கற்பினுக் கருங்கலத்தை வேறெங்குங் காணுதல முடியாதெனக் கருதி அனுமான் மகிழ்கின்றான். அது பற்றியே பிராட்டியை—வம்பின் முலையாய்—என்று அழைக்கின்றான். இந்தப் பொருள் சாதாரண வுரைகளை வைத்துக் கற்பவருக்குப் புலப்படாது. காவிய ஆராய்ச்சியில் தலையிடுவோர்க்குச் சொல்லின் பொருள் தெரிய நிகண்டு நூல் உணர்ச்சியும், சொற்களின் சம்பந்தம் வடிவமென்பன தெரிய இலக்கண நூல் உணர்ச்சியும் முதற்கண் அத்யாவசியம் இருத்தல் வேண்டும். வம்பின் முலையாய்!

என்னுஞ் சொற்றொடரை நிகண்டு இலக்கண மென்னும் இவ்விரண்டின் உதவியால் பொருள் பண்ணுவோம்.

வம்பு என்ற சொல்லுக்குக் கச்சு என்ற பொருண் மட்டுமன்று, புதுமை என்ற பொருளும் உண்டு. (நிகண்டு அல்லது அகராதி பார்க்க) புதுமையாவது யாது? வேறெங்குங் காணப்படாமைதானே.

மூலே என்பது முல்லே என்பதன் இடைக்குறை. இலக்கியங்களிலே இவ்விதம் இடைக்குறைகள் வருவது வெகு சாதாரணம். சிறுவர்கள் கூட இதனை அறிவார்கள். 'அறஞ்செய விரும்பு' என்பதில் செய என்பது செய்ய என்பதன் இடைக்குறையாய் வந்தது. 'தலேயாயவர் செருக்குச் சார்தல் இலே' என்பதில் இலே என்பது இல்லே என்பதன் இடைக்குறையாய் வந்தது. 'அஞ்சன் மடவனமே' என்பதில் அனமே யென்பது அன்னமே என்பதன் இடைக்குறையாய் வந்தது. 'ஒரு மொழி மூவழிக் குறைதலு மனைத்தே' என்பது இலக்கண விதி. ஆகவே, முல்லே யென்னுஞ் சொல் மூலேயென இடைக் குறையாய் வந்தது. முல்லேயென்ற சொல்லோ கற்பு என்று பொருள்படும் (நிகண்டு அல்லது அகராதி பார்க்க) ஆகவே, வம்பின் மு(ல்)லே என்பது புதுமையான வேறெங்குங் காணப்படாத கற்பு என்று பொருள் படும்.

ஆய் என்ற சொல் தாய் என்று பொருள்படும். (நிகண்டு அல்லது அகராதி பார்க்க) சீதாபிராட்டி சமீபத்திலிருப்பதால் அநுமான் அண்மை விளியாக அழைக்கிறான்.

ஆகவே—வம்பின் மூலேயாய்—என்பது வேறெங்குங் காணப்படாத கற்பினையுடைய தாயே என்று பொருள் படும். இக் கருத்துக் கொண்டன்றி வேறு எக்கருத்துக்கொண்டு அநுமான் தனது எஜமானன் தேவியை அழைத்திருக்கக் கூடுமென்று, வாசகர்களே! சிந்தியுங்கள்,

காதலனென்னுஞ் சொல் கணவனேயும் குறிக்கும்; மகனேயும் குறிக்கும். காதலி யென்னுஞ் சொல் மனேவியையும் குறிக்கும்; மகளேயுங் குறிக்கும். ஒரு தாய் தன் மகனே என் காதலனே என்று கூறினால், உடனே ஓ! இவ்வாறு அழைப்பது கூடுமா? இஃது என்ன ஒழுக்கமுறை? இவள் தன் மகனே..........வைத்துக் கொண்டிருக்கிறாள் போலும் என்று கேட்டால், அப்படிக் கேட்பது கேட்பவனுடைய மூடத்தனத்தையும் கல்வி வாசனே யில்லாமையையுந் தூர்த்தத் தன்மையையுந் தானே காட்டும்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41

ஓம்

திருமணவாழ்த்தும்

# நீதிநெறித் தாலாட்டும்.

இவை

பண்டிதர் மு. பொ. ஈசுரமூர்த்தியா பிள்ளை
அவர்களால் இயற்றப்பெற்று

ஸ்ரீவில்லி புத்தூர்

ம-ா-ா-ஸ்ரீ T. சண்முக சுந்தர முதலியாரவர்கள்

விரும்பியவண்ணம்

சென்னை: ரா. விவேகானந்த யந்திரசாலையில்

பதிப்பிக்கப் பெற்றது.

1912

இதன் விலை அணா 1½

REGISTERED COPYRIGHT.

ஓம

# திருமணவாழ்த்தும்

# நீதிநெறித்தாலாட்டும்.

---

இவை

பண்டிதர் மு. பொ. ஈசுரமூர்த்திப்பிள்ளை

அவர்களால் இயற்றப்பெற்று

---

ஸ்ரீ வில்லிபுத்தூர்

மகா-ள-ள-ஸ்ரீ T. சண்முகசுந்தர முதலியாரவர்கள்

விருப்பவண்ணம்

---

சென்னை ரா. விவேகானந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப் பெற்றது.

1912

---

தனி விலை அணா $1\frac{1}{2}$.

# முன்னுரை

"எல்லாப்பொருளும் இதன்பாலுள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் — சொல்லாற்
பரந்தபாவா லென்பயன்? வள்ளுவனார்
சுரந்தபாவையத் துணை."

என 'மதுரைத்தமிழ் நாயகனார்' திருக்குறளைப் புகழ்ந்து துதித்தார். இத்தகைய திருக்குறளாகிய நம் தமிழ் மறையானது அன்று தொட்டு இன்றுவரை, அதாவது 1500 ஆண்டுகளுக்கு மேலாக, தமிழர்களாலும் மற்று உலகத்தில் அறிவுடையவர்கள் யாவர்களாலும் பொதுமறை என்று போற்றிக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதற்கு உயர்வொப்பாகிய நூல் இதுவரை எம்மொழியிலும் தோன்றவில்லை என்பது ஒப்பமுடிந்த உண்மை.

'நீதிநெறித்தாலாட்டு' என்னும் இந்நூலானது, அத்திருக்குறளில் அடங்கிய 133 அதிகாரத்திற்கும் ஒரு அதிகாரத்திற்கு ஒரு கண்ணியாக 133 கண்ணிகளாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அதிகாரத்திலும் முக்கிய கருத்து ஒன்று இத்தாலாட்டில் வைக்கப்பட்டுள்ளது.

'தாலாட்டு' என்னும் சொல்லால், தொட்டிற் பருவமுடைய சிறுவர்க்காக இந்நூல் இயற்றப் பெற்றிருக்கிறதென்பது தெரியவரும். இத்தாலாட்டைப் பாடுவோரும், பாடுவிப்போரும், கேட்போருமாகிய ஒரு குடும்பத்தில் பலபருவத்து மக்களின் கருத்தும் இதிற் செல்லும்படி நேரிடுமாதலின் இந்நூல் யாவர்க்கும் பயன்படுவதாகவேயிருக்கின்றது. மேலும், முதனூலாகிய திருக்குறளைப்பற்றிய எண்ணமும், அதனைக் கற்கும் விருப்பமும் பற்பலரிடத்தும் உண்டாவதற்கு இந்நூல் சிறந்த கருவியாகின்றது.

குழவிப்பருவத்தில் ஊட்டுமறிவே பின்வளர்வது இயற்கையாதலின், இவ்வுண்மையுணர்ந்த இந்நூலாசிரியர், இம்மை, மறுமை, வீட்டிற்கு உறுதி பயப்பதோர் நீதிநெறியை விளக்குவதாகிய இவ்வின்னமுதை, அப்பருவத்திலேயே யூட்ட வேண்டுமென்னும் கருத்துடையவர்களாய், இந்நூல் எழுத முன் வந்தார்கள். தமிழ் உலகம் இவர்கட்கு என்றும் கடப்பாடுடையதாயிருக்கின்றது.

பாளையங்கோட்டை,
28—6—12.

C. P. சுப்பய்யா பிள்ளை, B. A.

ஓம்

# நீதிநெறித்தாலாட்டு

## முகவுரை.

அறிஞர்காள் !

நன்னூல்களான தொன்னூல் பன்னூலின் முன், நூலெனத் தகும் என்னூலெனினும் இயற்றும் ஆற்றல் எனக்கில்லை என்றறிந் தடங்கியிருக்கிற எனக்கு சின்னூலாகிய இந்நூல் வரலாறு கூற விடை யருண்மின்:

7, 8, வருஷத்திற்குமுன், தாலாட்டுக்கண்ணியில் ஒன்றேனும் தெரியாதிருந்த எனதுபுதல்விக்கு தலைக்குழந்தை பிறந்தவுடனே, நீதியுணர்த்தத் தக்க கண்ணிகள் சிலதனக்குக் கற்பிக்க வேண்டுமென்றுகேட்டுக்கொண்டபடியால், நீதிநூல்களிற்சிறந்த திருக்குறளிற் சிலவற்றிற்குக் கருத்துரை கூறு முறைபோல் 30 கண்ணி எழுதிக் கொடுத்தேன். இவற்றைக் கேள்வியுற்ற நண்பர்கள் சிலர் தங்களுக்கு ஒவ்வொரு பிரதி விரும்பினார்கள். ஆனால் இரண்டொருவர்க்கு மாத்திரம் அங்ஙனம் செய்வித்தல் வாய்த்தது. வேறு சிலர் "அச்சிட்டுத்தருக" என்றார்கள். அதற்கப்பால் அறம், பொருள் ஆகிய இருபாலிலும் ஒவ்வொரு அதிகாரத்திற்கு ஒவ்வொரு கண்ணிவைத்துப் பாடி 70-வரை ஆனவுடன், இது பெரும்பாலார்க்குப் பொருந்திய நடையில் அமைந்திருக்கிறதாவென்று தெரிந்துகொள்ளக் கருதி, ஸ்ரீவில்லிபுத்தூர் இந்துக்கல்விச்சாலையில் பலவித்துவான்கள் முன்னிலையில், ம-ள-ள-ஸ்ரீ V. குப்புசுவாமிஅய்யரவர்கள், பி. ஏ., பி. யல்.,(டிஸ்திரிக்கட்டுமுன்சீபு) சபைத்தலைமையில் அரங்கேற்றப் பெற்றது.

அப்பால் இருபாலும் சேர்ந்து நூற்றெட்டுக்கண்ணிகளாய் முடிந்தபின், பாளையங்கோட்டையில் எனது நண்பர் C. P. சுப்பய்யா பிள்ளை, B. A. (Pleader) யவர்களிடத்தில் காண்பித்தேன் அவர்கள்

பார்த்துக் காமத்துப்பால் என் சேர்க்கவில்லை என்று கேட்டார்கள். அகப்பொருளை வெளிப்படையாகக்கூறல் அடாதென்றும் பொருத்த முறக்கூறல் என் போலியர்க்கியலாதென்றும் பகர்ந்தேன். அவர்கள், முதனூற்படியே முப்பாலும் மொழிதலே முறையா மென்றும் அன்றேல் குறையாமென்றும் எற்கு வற்புறுத்தியுணர்த்தியதால் மூன்று வது பாலும் சேர்த்து முடிக்கலுற்றேன். முடிந்தபின், 1909ஆு மேமீ 4வ திருநெல்வேலியில் தாயம்மையம்மாள் பெண் கல்விச் சாலையில், ஸ்ரீமான் கோ. சுந்தரமூர்த்தி பௌராணிகர் சபைத்தலைமையில், ஸ்ரீமான்பண்டிதர் தி. பா. சிவராமபிள்ளையவர்கள் முதலிய செந்தமிழ்ப் புலவர்கள் முன்னிலையில் பிற்பாகமும் அரங்கேற்றப் பெற்றது.

இனி, இந்நூலைத்தனிமையிற்பார்வையிட்டு அபிமானித்த கனவான்களுக்கும் கடமைபட்டுள்ளேன் ஆகலான் விரிவஞ்சி இருவர் பெயர்மட்டும் குறிக்கிறேன்: திருவனந்தபுரம் ம-ா-ா-ஸ்ரீ சு. க கணபதிப் பிள்ளையவர்கள், திருநெல்வேலி வக்கீல் T. S. சுப்பிரமணியபிள்ளையவர்கள். இவர்களில், நெல்லை நண்பரவர்கள் இந்நூலை அழுத்தமாய்ப் பார்த்ததும் அன்றி, சில இடங்களில் இனிது விளங்க வைத்தற்கு, கூடவிருந்து உதவி புரிந்தார்கள். மேலும் இவர்கள், இத்துடன் சேர்ந்திருக்கிற "திருமணவாழ்த்தையும்" சிரத்தையுடன் பார்த்து அச்சிற்பதிப்பிக்க விரும்பினார்கள்.

## திருமணவாழ்த்தின் வரலாறு

மூன்றுவருஷத்திற்கு முன், எனது பழய மாணாக்கரும் நண்பருமாகிய சுற்றத்தார் ஒருவரது திருமணத்திற்கு என்னைப் போகவொட்டாமற் செய்த காய்ச்சலுக்குப் பொழுது போக்காகவும் எனதாற்றாமையை மாற்றும்படியாகவும் சில வாழ்த்துக்கண்ணிகளை எழுதியனுப்பலுற்றேன். எழுதும் இடையில் பார்த்த தோழர் ஒருவர் 'இது பொதுவாக வழங்கத்தக்கதாகும்' என்று கூறியதால் பின்பு சிறப்புப்பெயர்களை மாற்றி வேறு பிரதி எழுதினேன். அப்பால் ஸ்ரீவில்லிபுத்தூர் பென்னிங்டன் புஸ்தக நிலையத்தில் ம-ா-ா-ஸ்ரீ K. S. இராமசுவாமி சாஸ்திரிகள், பி. ஏ., பி. யல்., (டிஸ்திரிகட்டு முன்சீபு) சபைத்தலைமையில் இதுவும் அரங்கேற்றப்பெற்றது.

அதன்பின்பு, திருநெல்வேலியில் ஒரு கலியாண வீட்டில் ம-ள-ள-ஸ்ரீ N. A. V. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், பி. ஏ., பி.யல், சபைத்தலைமையில் மணமக்களை வீற்றிருக்க வைத்து ஒருமுறை வாசிக்கலாயிற்று. இப்பால் தாலாட்டை அச்சிடக் கொடுக்குங்கால் இவ்விரண்டுக்கும் பொருத்தம் தோன்றியதால் இதனையும் சேர்த்துக்கொடுத்தேன்.

இவற்றின் பிறப்பை முன்னரே அறிந்து அபிமானித்த நண்பர்களிடத்தில், எனது நன்றியுணர்வை முன்னிட்டு, காலங்கடத்திய குற்றத்தை மன்னிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

ஸ்ரீவில்லிபுத்தூர்,
ஜூன்மீ, 1912.

இங்ஙனம்
மு. பொ. ஈசுரமூர்த்தியாபிள்ளை.

# நீதிநெறித் தாலாட்டு

## காப்பு வெண்பா

செய்ய திருக்குறளிற் சேர்ந்த பத்துக்கொன்றாகத்
தய்யல் தாலாட்டும் தாம்பாட,—மெய்யடியார்
நெஞ்சிற் பொலிந்திலங்கும் நின்மலனை நேர்மையுற
அஞ்சலி செய்கின்றும் அமர்ந்து.

---

கண்ணே! என்கண்மணியே! கண்மணியின் உள்ஒளியே!
எண்ணே! எழுத்தே! எழுத்துணரும் மாமணியே!

## அறத்துப்பால்.

### 1. கடவுள் வாழ்த்து

அகரம் எழுத்தின் முதல் ஆகிநிற்குந் தன்மையைப் போல்
சகம் எலாம் தோற்றுவிக்கும் சாமியை நீ கைதொழுவாய்.

### 2. வான்சிறப்பு.

உண்ணும் பொருள் எல்லாம் உண்டாக்குந் தானுணவாம்
மண்ணில் மழையதுபோல் மாண்பொருள் மற்றில்லையம்மா!

### 3. நீத்தார் பெருமை.

உள்ளத் துறவுடைய உத்தமர் சீர் ஓதில் முந்நீர்ப்
பள்ளத்திலும் பெரிதாம் பாராய் பசுங்கிளியே.

### 4. அறன் வலியுறுத்தல்.

பொய்யாசை கோபம் பொறாமை கொடுஞ்சொல் நீக்கில்
செய்யும் தொழில்கள் எல்லாம் செய்ய அறமாய் அமையும்.

### 5. இல்வாழ்க்கை.

இல்லறமே மாந்தர்க்கியல்பாம். துறவறமும்
நல்லறமே யாகும் என்பார் நற்றுணைதான் இல்லை எனில்,

### 6. வாழ்க்கைத் துணை.

தன்னொழுக்கம் குன்றாமல் தன்கணவனைப் பேணும்
பொன்னே பெண்ணாவாள் எனப் போற்றுவார் புண்ணியரே.

### 7. புதல்வரைப் பெறுதல்

தந்தை கடன்மைந்தருக்குத் தக்ககல்வி ஓதுவித்தல்.
மைந்தர்கடன் தங்குலத்தை மாட்சிமையால் ஏற்றுதலே.

### 8. அன்புடைமை.

அன்பேஉயிர்க்குயிராம். அன்பிலாரே பிணங்காண்.
இன்பமுற வேண்டுவையேல் யாரிடத்தும் அன்புவைப்பாய்.

### 9. விருந்தோம்பல்.

வந்தவிருந்தை அன்பாய் வாழ்த்தி உபசரித்தால்
எந்த நாளும் இளையாள் இருப்பாள் இனிதமர்ந்தே.

### 10. இனியவை கூறல்.

கனியிருக்கக் காய் அருந்தின் கண்டோர் சிரிப்பர் அன்றோ!
இனிய மொழியிருக்க ஏசல்மொழி பேசுவதேன்?

### 11. செய்நன்றி அறிதல்.

நன்றி செய்தபேரை ஒரு நாளும் மறவாதே.
அன்றே மறந்திடு நீ ஆர்செய்த தீங்கையுமே.

### 12. நடுவு நிலைமை.

நன்மைதரும் என்றாலும் நீங்காய் நடுநிலைமை.
இன்மை யுனக்கதனால் எய்திடினும் ஏசாரே.

### 13. அடக்க முடைமை.

அடக்கமுடன் பணிந்தால் அமராபதி ஆள்வாய்
அடங்காதார்க் கெல்லாம் அருந்துயர மேகதியாம்.

### 14. ஒழுக்கம் உடைமை.

ஒழுக்கம் உடையவரே உத்தமர்; மேலான குலம்.
இழுக்குடையார் எல்லாம் இழிந்தகுல மாவர்கண்டாய்.

15. பிறன் இல் விழையாமை.

நன்மனையோடின் புறலே தக்கது. மற்றோர் மனையால்
நுன்புறுதற் கெண்ணுதலும் ஈனமிகு துன்புறுமே.

16. பொறையுடைமை.

பொறுத்தார்க்கிப் பூமியிலும் பொன்னுலகிலும் புகழாம்.
பொறுமையிலார்க்கின்பம் பொருந்தாதொரு நாளும்.

17. அழுக்காறாமை.

சேர்ந்த இடத்தைப் பொசுக்கும் தீயினைப்போல் எந்நாளும்
ஊர்ந்த பொறாமைதான் அகம்பொசுக்கும்; ஆகாதே.

18. வெஃகாமை.

பிறர்பொருளை இச்சித்தல் பேதமையாம். பின்னும் அதே
முறவழிக்கும் நற்குடியை. ஆர்_அமுதே நீயறிவாய்.

19. புறங்கூறாமை.

டன் குற்றம் நீயுணர்ந்தால் ஊரார்தம் மேற்பழியை
முன்பற்றுக் கூறுவையோ! ஆய்ந்துரையாய் கண்மணியே.

20. பயனில் சொல்லாமை.

துங்கணத்தின் நின்றும் அழுக்குநீர் தான்கசியும்.
பொங்கிவரும் புன்மொழியே புல்லரியல் காட்டிடுமே.

21. தீவினை அச்சம்.

தீவினைக்கே அஞ்சிடுக. தீவினை செய்தோர்க்கும் அதை
திரும்பச் செய்யாமை நீதிமுறை என்றறிவாய்.

22. ஒப்புரவறிதல்.

ஏதும் எதிர்பாராமல் எங்கும் மழை பெய்வதுபோல்
நீதியுடனே பிறர்க்கு நீயுதவி செய்திடுவாய்.

23. ஈகை.

இல்லாருக் கீவதுடன் ஏற்பதிகழ் வென்றறிதல்
நல்லாரியல் பெனவே நன்கறிவாய் கண்மணியே.

### 24. புகழ்.

புகழோங்க வாழ்வாரே வாழ்வாரிப் பூமியிலே
இகழ்பட வாழ்வோர்கள் இறந்தவரை ஒப்பர்கண்டாய்.

### 25. அருளுடைமை.

அன்பின் விரிவே அருளாம். அருளுடையார்
இன்பமுடையார்; மற்றெப்பொருளும் தாமுடையார்.

### 26. புலால்மறுத்தல்.

தன்னுடம்பையே வளர்க்கத் தக்கோர் பிறிதுடம்பைத்
தின்னும் விருப்பம் தினையளவுங் கொள்ளாரே.

### 27. தவம்.

வந்ததுன்பம் தான்சகித்தல், வாழும் உயிருக்கிடைஞ்சல்
எந்தவிதமுஞ் செய்யாதே யிருத்தல், நற்றவங்காண்.

### 28. கூடாவொழுக்கம்.

வஞ்சத்தவவேட மானிடர்கள் தம்மையவர்
நெஞ்சே சிரித்திகழும்; நீயுணர்வாய் கண்மணியே.

### 29. கள்ளாமை.

எள்ளாமை வேண்டுவையேல் இம்மை மறுமையிலும்
கள்ளத் தனத்தைக் கனவிலும் நீ எண்ணுதே.

### 30. வாய்மை.

பொய்மை பலதீங்கின் புகலிடமாய் நிற்பதுபோல்
மெய்மை பல நன்மைகளை மேல்வளர்க்குந் தாயாமே.

### 31. வெகுளாமை.

சேர்ந்தாரைக் கொல்லுஞ் சினத்தைச் செலுமிடத்தும்
ஓர்ந்து பொறுமையுடன் உள்ளடக்கு கண்மணியே.

### 32. இன்னா செய்யாமை.

தீங்குனக்குச் செய்தோரைத் தெண்டித்திடும் வகைகேள்;
பாங்கவர்க்குச் செய்வாயேல் பணிவரவர் நாணமுடன்.

### 33. கொல்லாமை.

உன்னுயிர் எவ்வண்ணம் உனக்கருமையோ அதுபோல்
மன்னுயிர்க் கெல்லாம் இருக்கும்; மாள்வித்தல் பாதகங்காண்.

### 34. நிலையாமை.

நிலையில்லா வாழ்வை நிலையுடையதாக வெண்ணி
அலைவுதருந் தீங்கியற்றல் ஆகாது கண்மணியே.

### 35. துறவு.

எதன் எதன்மே லாசையைநீ எற்றாமல் விட்டனையோ
அதன் அதனால் நீ துன்ப மடைவதில்லை கண்மணியே.

### 36. மெய்யுணர்தல்.

எப்பொருள் எத்தன்மையதாய்த் தோன்றிடினும் அப்பொருளின்
மெய்ப்பொரு ளாராய்ந் துணர்தல் மெய்யறிவாம் கண்மணியே.

### 37. அவாவறுத்தல்.

பிறவிக்குக் காரணமாம் பேராசையை ஒழித்தால்
துறவிக்கு மேலாவாய் துன்பம் உனைச் சாராதே.

### 38. ஊழ்.

நல்ல காலத்தில் எல்லாம் நன்றாய் முடிவதுபோல்
பொல்லாக் காலத்தெதுவும் புண்படுத்தும் அஞ்சாதே.

---

## பொருட்பால்.

### 39. இறைமாட்சி.

முறைசெய்து காப்பாற்று மன்னவனே மக்களுக்கோர்
இறை என்னலாகும்; அவன் எவ்வுயிர்க்கும் தாயாமே.

### 40. கல்வி.

கற்கத் தகும்நூல் களங்கமறக் கற்றபின்பு
சொற்படி நேராய் நடந்தால் தோன்றும் சுகமனைத்தும்.

## 41. கல்லாமை.

கல்விதரும் பேரழகே கட்டழகாம்; கல்வியில்லாப்
புல்லர் அழகுவெறும் பொம்மை அழகொப்பாமே.

## 42. கேள்வி.

கற்றறிந்திலாய் எனினும் கேட்டறிவாய். அவ்வறிவும்
உற்றதுணையாய் உதவும்; உண்மையிது கண்மணியே.

## 43. அறிவுடைமை.

மனம்போனபோக் கெல்லாம் போகாமல் மார்க்கமறிந்து
இனமான நன்மை இயற்றல் அறிவாம் மணியே.

## 44. குற்றங்கடிதல்.

சிறுமைசினம் லோபம் வீண்களிப்பு சேர்செருக்கு
ஒறுக்கத்தகுங் குறைகள் ஓர்ந்துதவிர் கண்மணியே.

## 45. பெரியாரைத் துணைக்கோடல்.

பெரியோர்களைத் துணையாய்ப் பேணிக்கொள்வோர் இடத்தில்
அரியபொருள் எல்லாம் அமைந்திடுங்காண் ஆரமுதே.

## 46. சிற்றினஞ் சேராமை.

மாமழைநீர் தான்சேர்ந்த மண்ணியல்பாய் மாறுதல்போல்
நாம்சேர்ந்த மாந்தர்குணம் நம்மையுறும் நல்லமுதே.

## 47. தெரிந்து செயல்வகை.

எண்ணி எண்ணித் தேர்ந்து தெளிந்தே தொழிலும் செய்திடுக.
எண்ணாது செய்துபழி எய்தல் இழுக்கென்றுணர்வாய்.

## 48. வலியறிதல்.

வினைவலியும் உன்வலியும் மாற்றான்வலியும் உன்தன்
துணைவலியும் ஓர்ந்தே தொழில்செய்நீ கண்மணியே.

## 49. காலம் அறிதல்.

காலநயம் ஆராய்ந்து காரியங்கள் செய்வோர்க்கே
ஞாலமுங் கைவசமாம் நற்கதியும் உண்டாமே.

### 50. இடனறிதல்.

ஆனையை வெல்லும்முதலை ஆழ்நீர்விட்டிங்கு வந்தால்
பூனையைக் கண்டாலும் அஞ்சும் பூமிவலி தேர்ந்திடுவாய்.

### 51. தேர்ந்து தெளிதல்.

கற்றசில இடத்தும் கார்மடமை யுண்டதனால்
உற்றகுணங் குற்றம் இரண்டாராய்ந் துறுதிகொள்வாய்.

### 52. தேர்ந்து வினையாடல்.

இதனால் இதனை இவன்முடிப்பான் என்றறிந்தே
அதனை அவன்பால் விடுத்தல் ஆளுமுறை ஆணிமுத்தே.

### 53. சுற்றந்தழால்.

சுற்றத்தார்க் கீந்தவர்கள் சூழ்ந்திருக்க வாழ்தல் செல்வம்
பெற்றதனாற் கொள்ளும் பெரும்பயன் காண்பேரரசே.

### 54. பொச்சாவாமை.

சினம் எத்தனை தீங்கு செய்யுமோ அத்தனையும்
மனமறதியாலும் வரும்; மற்றதனை நீக்கிடுவாய்.

### 55. செங்கோன்மை

வேலால் வருத்தல் அரசன்று. வெகு சீருறுசெங்
கோலாற் குடிதழுவல் குற்றமிலா வெற்றிதரும்.

### 56. கொடுங் கோன்மை.

ஏழையழுத கண்ணீர் கூரிய வாளாகும். மன்னன்
வாழ்வுகுன்றும்; மண்ணில் மழைவளமுங் குன்றிடுமே.

### 57. வெருவந்த செய்யாமை.

காணக் கிடையான் கடுத்த முகமுடையான்
காணுக்கொடுஞ் சொல்லான் நாட்டைவிடக் காடுநன்றே.

### 58. கண்ணோட்டம்.

காரியக் கேடாகாமல் கண்ணோட்டஞ் செய்யவல்லார்
சீரியர் ஆவார் எவர்க்கும் திண்ணமிது தெள்ளமுதே.

## 59. ஒற்றாடல்.

நாட்டினில் எங்கெங்கும் நடப்பவற்றை ஒற்றர்களால்
கேட்டறிதல் மன்னவர்க்குக் கேடுதரா நன்னெறியாம்.

## 60. ஊக்கம் உடைமை.

ஊக்க முடையார்க் கொருக்காலுங் கேடிலையே
ஆக்கம் அதுவாம் எனவே ஆய்ந்தறிவாய் மாங்குயிலே.

## 61. மடியின்மை.

மடி என்னும் சோம்பல் கொண்டார் மாமுயற்சி செய்பவர் தம்
அடிமையாய்க் கீழ்ப்படுவர். ஆதலிற் சோம்பாகாதே.

## 62. ஆள்வினை உடைமை.

வேளாண்மை என்னும் விருந்தோம்பும் மேன்மை, மிக்க
தாளாண்மை யாகிய தன் ஆள்வினையா லாகுமன்றே.

## 63. இடுக்கணழியாமை.

இன்பம் விரும்பாதிருந்தே என்னதுன்பம் வந்தாலும்
முன்பு நின்று தாக்கின் அந்தத் துன்பம் நமைத் தாக்காதே.

## 64. அமைச்சு.

எல்லாந் தெரிந்துணர்ந்தே ஏற்றபடி செய்துறுதி
சொல்லுதலும் வல்லவனே சூழ்ச்சியுள்ள மந்திரியாம்.

## 65. சொல்வன்மை.

கேட்டார் வசப்படவும் கேளார் விரும்பிடவும்
பாட்டார் மதிக்கும் உயர் பால்மொழி நீ செப்பு கண்ணே.

## 66. வினைத்தூய்மை.

தாய்பசியால் நொந்தாலும் தாழ்வான செய்யாதே.
நோய் கொளினும் செய்யாதே நூலோர்பழிக்கும் வினை.

## 67. வினைத்திட்பம்.

எண்ணியவா றெப்பொருளும் எய்தலாம் எண்ணியவை
திண்ணமாய்க் கொண்டு தொழில் தீர்க்கமுடன் செய்வாரேல்

68. வினை செயல்வகை.

முடிவும், இடையூறும், முற்றியபின் அச்செயலால்
படுபயனும், ஆராய்ந்து பார்த்து வினைசெய்திடுவாய்.

69. தூது.

தூதர்க்கு வேண்டுவன தூய்மை, துணிவுடைமை,
மேதக்க கல்வியறிவு, ஆராய்ந்த சொல்வன்மை.

70. மன்னரைச் சேர்ந்தொழுகல்.

அகலாதணுகாதே அரசன் அருகேயிருந்து
முகக்குறியால் ஓர்ந்து மொழிதல் மந்திரிக்கழகாம்.

71. குறிப்பறிதல்.

கூறாமல் யாவும் குறிப்பால் அறியவல்லார்
மாறாமல் வேந்தர் மணியாய் விளங்குவரே.

72. அவையறிதல்.

அவையறிந் தாராய்ந்தரு நூற்பொருள் உரைப்பாய்;
மிகைபடச் சொல்லுவதால் மேன்மை கெடுங்கண்மணியே.

73. அவை அஞ்சாமை.

கற்றோர் சபைதனில் நீ கற்றபொருள் நன்குரைத்து
முற்றும் அவர்கூற, முழுதும் உணர் கண்மணியே.

74. நாடு.

தீயாவிளைவும், திருவுடையார், தக்கோரும்,
ஓயாவளமும் உடைய, துயர் நாடாமே.

75. அரண்.

பகைவர் புகற்கரிதாய்ப், பண்டம் எலாம் உள்ளுடைத்தாய்,
வகையா நீர், மண், மலை, கான், வாய்ப்புடையதே அரணும்.

76. பொருள் செயல்வகை.

இல்லாரையாரும் இகழ்வார்; உடையாரைப்
பொல்லாரெனினும் புகழ்வார்; பொருள்வலிதே,

77. படைமாட்சி

கூற்றன் எதிர் வந்தாலும் கோபித்தெதிர் நின்று
ஆற்றலுடன் போர்புரியும் ஆண்மையுள்ளதே படையாம்.

78. படைச்செருக்கு.

கண்ணெதிர் வேல்தாக்குறினும் கண்ணிமையாத் தீரமனத்
திண்ணமுடைமை செருக்காம் படைதனக்கே.

79. நட்பு.

நல்லோருடைய நட்பு நாள்தோறு மேல்வளரும்;
பொல்லாருடைய நட்புப் போகப் போகக் குறையும்.

80. நட்பாராய்தல்.

கெடுங்காலங் கைவிடுவார் கேண்மைக் குரியரல்லர்;
கொடுத்தேனுங் கொள்ளுக நீ குற்றமிலார் நட்புரிமை.

81. பழமை.

நண்பர் சில வேளையில் நாம் புண்படவே செய்திடினும்,
பண்பெனப் பாராட்டல் பழமை நயம், கண்மணியே.

82. தீ நட்பு.

சொல்வதொன்று, செய்வதொன்று, தன்னுமனத் தொன்றுடைய
பொல்லார் நட்புக்கனவிலும் பொருந்தலாகாதே.

83 கூடா நட்பு.

தொழுகையுள்ளும் வாளிருக்கும்; சூதுடையோர் ஏங்கிமிக
அழுகையுள்ளும் வஞ்சனையுண்டச் செயலை நம்பாதே.

84. பேதமை.

ஓதியுணர்ந்தும், பிறர்க்குரைத்தும், தானடங்காப்
பேதையைப்போற் பேதையுண்டோ? பேசாய் என்கண்மணியே.

85 புல்லறிவாண்மை.

அறிவிலார் என்றும் அவர்தமக்கே செய்யும் இடர்
பிறிதொருவர் செய்வாரோ? பேசாய் பசுங்கிளியே.

86. இகல்.

பகைத்தல் எனும் உட்பிணியைப் பாழ்பட நீ விட்டொழித்தால்,
மிகுத்த செல்வம் தான் வருங்காண்; மேற்கதிக்கும் சார்பாமே.

87. பகைமாட்சி.

அடுத்திருந்தே ஆகாதன செய்வாரோடுபகை
கொடுத்துங் கொளல் வேண்டும்; குற்றமன்று கண்மணியே.

88. பகைத்திறந்தெறிதல்.

பகைவரையும் நண்பரெனப் பார்த்தொழுகும் பண்புடையார்க்
இகல் இல்லை இவ்வுலகம்; யாவும் அவர்க்கீழ் அடங்கும்.

89. உட்பகை.

உட்பகை சற்றுண்டேல் உடனே வெளிப்படுத்தி
புட்பிளவைக் கொப்பாய்ப் பொருந்துமாறாற்று, கண்ணே.

90. பெரியாரைப் பிழையாமை.

பெரியார்க்கு நீ தான் பிழை எதுவேன் செய்வாயேல்,
எரியாற் சுடுவதிலும் எண்மடங்கு தீங்குறுமே.

91. பெண்வழிச் சேரல்.

இல்லாளுக் கஞ்சுவான், என்ன செய்வான்; எழையுயிர்!
நல்லார்க்கும் நல்ல செய்யான், நாளும் நடைப்பிணமே.

92 வரைவின் மகளிர்.

பணந்தெய்வம் என்பார், பணங்கொடுக்கும் பேர்களையூர்ப்
பிணம் என்றெண்ணிச் சேர்வார்: பேய்கள் உறவாகாதே.

93. கள்ளுண்ணாமை,

குடிவெறியாலே வழியில் கோலம் அழிந்தே கிடந்த
தடியனையான் பாராமல் தட்டிவிழுந்தேன், மணியே.

94. சூது.

சூதாற் கிடைத்த பொருள் தூண்டில் இரையாம்; அதனால்
யாதுவரினும் அதற்காயிரம் பங்காம் அழிவே.

95. மருந்து.

பிணியின் இயல்பும், பிணியாளியின் இயல்பும்
துணிந்து, காலத்தியல்பும் தூக்கல், மருந்தின் முறையாம்.

96. குடிமை.

கோடிபெறினும் குடிப்பிறந்தார் தீயசெய்யார்;
நாடிடினும் நன்மை செய்யார் நற்குடித் தோன்றாதவரே.

97. மானம்.

மயிர் நீங்கின் வாழாத வண்கவரிமான் போல்வார்
உயிர்விடுவார், மானம் ஒழியும்படி நேர்ந்தால்.

98. பெருமை.

பொறுமை, பணிவுடைமை, போற்றி ஒழுகல், பெருமை;
சிறுமையாம்தற்பெருமை, சீறுதல், குற்றங்கூறல்.

99. சான்றாண்மை.

அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, ஐந்தும்
இன்பாலஞ் சான்றோர் இலக்கணங்காண், கண்மணியே.

100. பண்புடைமை.

அரம்போலும் கூர்ந்த மதியாளரே யானாலும்
மரம்போல் எண்ணப்படுவார், மக்கட்பண்பில்லாதார்.

101 நன்றியில் செல்வம்.

உண்ணான், பிறர்க்குதவான், உள்ள தெல்லாம் மூடிவைப்பான்,
எண்ணா மனிதன்; இந்த எட்டி பழுத்தென்னபலன்?

102 நாணுடைமை.

நடத்தையால் நாணுதலே நாணுடைமை; ஊண், உடை,
யாரிடத்து முண்டு; பாவை இடைக்கும் உடை உண்டு, கண்ணே.

103 குடி செயல் வகை.

தன் குடும்பம் தாங்க எண்ணித்தாழா துழைப்பவர்க்கே,
முன்னின் றுதவும் முழுமுதலாம் மெய்பொருளே.

104 உழவு.

உழுதொழிலே எல்லாத்தொழிற்கும் உயர்ந்ததுவாம்;
தொழுதொழிலோர் தம்பசியாம் தீப்பிணி தீர்க்குமருந்தாம்.

105 நல்குரவு.

தீயின்மேல் தூங்கிடினும் தூங்கலாம்; தீவறுமை
நோய்கொண்டோர் தூங்கல் நொடிப்பொழுதேனும் அரிதே.

106 இரவு.

ஏற்பதுவும் ஈவதொக்கும், இல்லை என்று தீய்பவர்பால்.
தோற்பார் செல்வர், இரப்போர் தொல்லுலகில் இல்லை எனில்.

107 இரவச்சம்.

"பரந்து கெடுக" எனும் பாதக்குறள் பார்த்தோர்
இரந்துண்ணலும் தொழிலாம் இந்தியருக்கென்றாரே.

108 கயமை.

கரும்பிரும்பு போலும் கயவருக்குத் துன்பிழைத்தால்,
விரும்பியவாறெல்லாம் விரைந்தினிது செய்வாரே.

---

## காமத்துப் பால்.

---

புறநடை.

(a) காதலியல் உரைத்தல் கட்டம் இதில் என்றாலும்
ஓதல் ஒழிப்பின் ஒப்பார் ஓர்நூலறி வுடையார்.

(b) இம்மை மறுமைக்குரிய இல்லறமெய்யன்புணர்த்தி
நம்மை அரனோடிணைக்க நாடுவதிப்பாற்கருத்தாம்.

(c) காதலனும் காதலியும் காதலுரை கூறும் நடை
ஓதலுற்றேன்; நீதிமுறை உற்றுணர்வாய் கண்
[மணியே.

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS 41

### 109 தகை அணங்குறுத்தல்

உண்டால் அன்றோகளிப்பாம் ஊறிவரும் தேன் அமுதம்;
கண்டாற்களிமிகுமே காதலியின் கட்டழகை.

### 110 குறிப்பறிதல்.

கண்ணும் கண்ணுங்கலந்தால். காரியம் கல்யாணமதாம்;
பெண்ணும் பிள்ளையும் அப்பால் பேசில் என் பேசாவிடில் என்?

### 111 புணர்ச்சி மகிழ்தல்.

உணருந்தோறும்புதிய உண்மகிழ்ச்சி தோன்றுதல் போல்
புணருந்தோறுங்காதல் புத்தமுதாம்பூங்கிளியே.

### 112 நலம்புனைந்துரைத்தல்.

நிலவும் நிகர்த்தல் இன்றே நேரிழையின் செம்முகத்தை,
பலர்காண மாசுபடிந்திருக்கும் காரணத்தால்.

### 113 காதற்சிறப்புரைத்தல்.

கண்ணுள் எப்போதும் கலந்து நிற்கும் காதலரை
எண்ணும்வகை அறியேன், யாண்டும் மறவாததினால்.

### 114 நாணுத்துறவுரைத்தல்.

காதல் எனும் வெள்ளம் கரைபுரண்டு போகையிலே
நாதமூறு நாணம் கடுகிலை விட்டோமென்றே.

### 115 அலர் அறிவுறுத்தல்.

அலர் கூறிக்காதல் அவித்திடலாம் என்றிருத்தல்,
வலஞ்சுழிக்கும் தீயில் நெய்யை வார்த்தவித்தல் போலுமன்றே.

### 116 பிரிவாற்றாமை.

இனமிலாவூரில் இருத்தல் துன்பமாம்; அதிலும்
கன துன்பமாம் பிரிதல், கண்போன்றவர் துணிந்தே.

### 117 படர் மெலிந்திரங்கல்.

இறைக்க இறைக்கப் பெருகும் ஈரமணல் ஊற்றதுபோல்
மறைக்க மறைக்கமிகுமே மாறாத காதலினோய்.

118 கண்விதுப்பழிதல்.

காணாப்போதும் தூங்கா; கண்டவிடத்தும் தூங்கா;
வீணாய்த்துயருறுமே வேலையற்ற கண்களைந்தே.

119 பசைப்புறுபருவரல்.

சாயலும் நாணும் அவர் கொண்டார்; கைம்மாறா
நோயும் பசப்பும் எனக்களித்தார்; நோவதென்னே!

120 தனிப்படர் மிகுதி.

ஒருதலை சேர்காதல் மிக உண்டாக்கும் துன்பமரோ;
இருதலையும் நோயிசையின், இன்பங்கைக்கனியாம்.

121 நினைந்தவர் புலம்பல்.

தந்நெஞ்சுள் என்னை வரவிடார்; நாணாரோ,
எந்நெஞ்சுள் என்றும் இனிது வந்து வாழுதற்கே!

122 கனவுநிலையுரைத்தல்.

தூங்கும்போதெல்லாம் என் தோழ்மேலிருந்து, விழித்
தாங்கு நெஞ்சினுள் ஒழிப்பர் அன்புடையார், ஆரமுதே.

123 பொழுது கண்டிரங்கல்.

காலை அரும்பாய்க், கடும்பகலிற் போதாகி,
மாலை மலர்ந்திடும்பூ, மன்னிய காதல்தானே.

124 உறுப்பு நலனழிதல்.

முயங்கியகை சற்றே நெகிழ்த்தேன், நோமென்று முன்னாள்
அயர்ந்து பசந்ததவள் நெற்றி; இன்னும் ஆற்றுவனோ!

125 நெஞ்சொடு கிளத்தல்.

காதலர்பாற் செல்லின், நெஞ்சே கண்ணிரண்டும் முன்கொடுபோ;
வாதனை செய்தென்னை வருத்தும், இவை இங்கிருந்தால்.

126 நிறையழிதல்.

மறைத்தாலும் தும்மலைப்போல மாறிவந்து தோன்றிவிடும்;
நிறையழிக்கும்; காதலின்நோய் நீங்கும் வகைவேறுளதோ!

### 127 அவர் வயின் விதும்பல்.

ஊடுவேனோ, கூடுவேனோ, ஊடலுடன் கூடுவேனோ,
நாடும் உளத்தோடணுகி நட்டார் என்முன்வரினே?

### 128 குறிப்பறிவுறுத்தல்

அன்பைப்பெருக்கி, என்பால் ஆர்துயர் எல்லாம் அகற்றி,
இன்பமுறக்கலத்தல் எண்ணுங்காற் சூதுடைத்தே.

### 129 புணர்ச்சி விதும்பல்.

ஊடலாம் என்றிருந்தேன் உற்றவரைக்கண்டவுடன்;
கூடல் அல்லாதொன்றுங் குறித்திலை; கூர் கெட்டநெஞ்சே!

### 130 நெஞ்சொடு புலத்தல்.

கெட்டார்க்கு நட்டாரில் என்னும்மொழி கேட்டதுண்டோ?
விட்டாய் நெஞ்சே எனை நீ; விட்டவர்பால் ஓடுதியோ?

### 131 புலவி.

உப்புணவுக் கெப்படியோ, அப்படி ஊடல் இனிதாம்;
தப்புணர்வாலே மிகுந்தால், தன் சுவையும் போய்விடுமே.

### 132 புலவி நுணுக்கம்.

தும்மினேன்; யார் நினைத்தென்றேங்கினள். தும்மடக்கி
விம்மினேன்; என் மறைத்தீர் என்று கண்ணீர் விட்டழுதாள்.

### 133 ஊடலுவகை.

உணவின் சுவை பசியால் உற்றுமிகுந்தன்மையைப்போல்
புணர்வின்பம் ஊடலினாற் பூரணமாங் கண்மணியே.

முற்றிற்று.

தேவர் நூலின் திருநெறிபற்றியே
பாவதாகிய பண்பிற்றாலாட்டுநூல்
யாவர்பாலும் இனிது விளங்கவே
தேவ நாதன் திருவடி வாழ்த்துவாம்.

# திருமணவாழ்த்து:

### தெய்வவணக்கம்.

எங்கும் எம்முளத்தும் தங்கும் இறைவனைப்
பொங்கும் உள்ளன்புடன் போற்றுவம் யாமே.

## பொதுவியல்: மணமக்களை ஆசீர்வதித்தல்.

வாழ்த்துகிறோம் வாழ்த்துகிறோம் மாப்பிள்ளையும்பெண்ணையும் நாம்
வாழ்த்துகிறோம் பல்லாண்டு மங்களமாய் வாழ்கவென்றே.

பூவும் மணமும்போல் பொருந்தியே வாழ்ந்திருப்பீர்!
பாவும் பொருளும்போல் பண்புடையராய் வாழ்வீர்!
பழஞ்சேர் சுவைபோற் பழகி நன்றாய் வாழ்ந்திருப்பீர்!
கிழம்பெரியரான பின்னும் கேண்மை குன்றாமல் வாழ்வீர்!
அன்றிலும் பேடும்போல் அன்பொழுக வாழ்ந்திருப்பீர்!
என்றும்பிரியீர் இமைப் பொழுதும் தாமறவீர்!
உத்திரமும் சுற்றூணும் ஒன்றிற் கொன்றாதரவாய்ப்!
பத்திரமாய் நிற்பதுபோல் பாங்குடையராய் வாழ்வீர்!

---

## தலைவனியல்: மணமகள் முன்னிலை.

---

பெண்மணியே கைப்பிடித்த பேரழகர் தன் குணத்தைக்
கண்மணியே சொல்லுகிறேன் காதலுடன் கேட்பாய் நீ
பூவுலகெலாம்புகழும் புண்ணியவான் தன் பெயரை
நாவிலுரைக்க கனி இனிக்கும் என்பர் நல்லோர்.
சீர்பொருந்தும் நம்மருமைச் செல்வர் குணம் செப்பிடுங்கால்
நார்பொருந்தும் பூமணம்போல் நாமுயர்வோம் நங்காய் கேள்.
ஆனாலும் நேரமில்லை அத்துணையும் சொல்வதற்கு
தேனிலும் சிறக உண்பவர்க்கே தீஞ்சுவையாம்
உன்கணவர் நம்பதியை உள்ளபடி ஓர்ந்தவர்கள்
நின்கணவர் எந்நாளும் நீங்காத பட்சம் வைப்பார்.

தலைவர் இவர் தன்கடமை தக்கபடி தேர்ந்தவர்காண்
தலைவியும் தானும் சரிசமனும் என்றுணர்வார்.
பலவிதத்திலும் மனைவி பர்த்தாவோ டொப்பெனினும்
சிலவிதத்தில் மேலெனவே சிந்திப்பார் உன்கணவர்
ஆதரவாய்ப் பெண்மணியை அன்பமருங்கண்ணெனவே
காதலுடன் காத்தல் கணவர்கடன் என்றறிவார்
என்றறிவதால் இந்த ஏற்றமுள்ள பெண்பிறப்பின்
நன்றறிவார் தம்முடைய நல்லுயிர் போற் போற்றிடுவார்
பசுவை வணங்குயிந்தப் பாரத நாட்டார் குறிப்பை
விசுவசிப்போர்க்கெல்லாம் விளங்கும் இதன் மெய்ப்பொருளே!
காதல்மேற் காதலுற்ற காதலர் கண்ணுள்ளொளிபோல்
பேதமறக்கலந்து பேரின்பம் எய்துவரே.
நாட்டுக்கெல்லாம் அரசாம் தன்மையுறப்பெற்றாலும்
வீட்டுக்கரசியிடம் விளையாடி வாழ்ந்திருப்பார்.
கோபியார்வீணாய்க் கொடுமொழிகள் தாம்பகரார்.
பாரியாள்சற்றும் பசித்திருக்கச்சம்மதியார்
சிறுமையால் சங்கடத்தால் சினமூட்டினாலுமவர்
பொறுமையால் எல்லாம் பொறுக்கவல்ல புண்ணியர்காண்
வீட்டு வேலை மிகுந்தும் வேலையர் இல்லாதிருந்தால்
கூட்டுவார் மூட்டுவார் கூட இருந்தாதரிப்பார்.
மகப்பெறுதலாம் பெருமை மாதருக்கே யானாலும்
மிகப்பண்புறவளர்த்தல் வித்தகர் கைக்கொள்வாரே.
பொறுமையே பூணாகப் பூண்ட செல்வர் ஆதலினால்
வறுமையிலும் வாழ்வு குன்றா வள்ளலிவர் கண்மணியே.
தாறுமாறாய்வைத் தன்மனைவி வச்சை எல்லாம்
சீறும் இடிமின்னல்என்றே சிந்தை நோவாதிருக்க
மேலும் அவள் தண்ணீரை மேடைமேல் நின்றூற்ற
சாலும் அந்த மின் இடிக்குத் தக்க மழை என்றுரைத்த
சான்றவரிற் சான்றவராம் 'சாக்கிரதாஸ்' (Socrates) என்பவரைப்
போன்றவர் என்றாலும் பொருந்தும் இந்தப்புண்ணியர்க்கே!
இன்னும்பலவாம் இவர்க்குள்ள நற்குணங்கள்.
சொன்னால் விரியும் சுருக்கினேன் பெண்மணியே.

## 3. தலைவி இயல்: மணமகன் முன்னிலை.

கலையெலாங் கற்றுணர்ந்த கன்னிகை நீர் கைப்பிடித்த
தலைவி இவள் தன் சீரைச் சாற்றுகின்றார் புண்ணியரே.
வார்த்தை செவிக்கமுதாம் வண்மை மிடிப்பகையாம்.
பார்த்தால் பசி தீரும் பால் போல் மதி முகத்தை
தலைவனே தெய்வம் என்பாள் தன்னுயிராம் என்றுணர்வாள்
நிலையறியும் தன்னிலையில் நீங்கா நிறையுடையாள்
காசுநகைவிரும்பாள் காவலன் பாதந்தொழுவாள்
மாசுமனத்திலுறாள் மங்கையிவள் மாண்புடையாள்.
யாங்காய்ச்சமைத்திடுவாள் பட்சணம் செய்யத்தவறாள்
தூங்காள் நீர் தூங்குமுன்னே தூங்கி முன்பு தானெழுவாள்
எத்தனைபேர் வேலைக்கிருந்தாலும் ஏற்றமுற
அத்தனையுமேற்பார்த் தழகாய் அமைத்திடுவாள்
பண்டங்கள் சிந்தாமல் பார்த்துவைக்கும் பாங்குடையாள்
கண்டபடி போடாமல் கட்டுமுட்டாய் வைத்திருப்பாள்
செட்டாய்ச்செலவிடுவாள் செல்வம் திரட்டி வைப்பாள்
கட்டாக வீட்டிலுள்ள காரியம் எல்லாம் முடிப்பாள்
தாராளக்காரி நன்றாய்த் தாரதம்மியம் தெரிவாள்
கூரானபுத்தியுள்ளாள் கூறுமலை அறிவாள்
தையல் முதலாம் தருந்தொழிலில் வல்லவள்காண்
கையாற் பலநலமும் கற்றுணர்ந்த கன்னிகைகாண்
விண்ணவரும் உள்மகிழ மேதினி எல்லாம் புகழ
பண்ணொடினிதாகப் பாடவல்ல உத்தமிகாண்
பூக்கொய்ய வல்லவள்காண் பூத்தொடுக்க வல்லவள்காண்
வாக்காக மற்றும் வரிசை செய்ய வல்லவள்காண்
போதிக்க வல்லவள்காண் புத்தி சொல்லவல்லவள்காண்
சாதிக்க வல்லவள்காண் சாஸ்திரத்தில் வல்லவள்காண்
கொண்டான் உளக்குறிப்பைக் கூர்ந்தறிய வல்லவள்காண்
"கொண்டா" எனும்முன் கொணர்ந்து வைப்பாள் வேண்டியதை
பண்டைப்பகை நினையாள் பண்புடையாள் யாரிடத்தும்
சண்டை செய்வோர் தங்களையும் தான்போய் விலக்கிடுவாள்

வீட்டு வேலை தீர்ந்தால் வீண்பேச்சுப் பேசாமல்
பாட்டும் படிப்பும் பயின்றிருப்பாள் எந்நாளும்
உத்திபோக வேலை மிகுந் துமை வருத்தும் வேளைகளில்
பத்திமையால் தான்பகுந்து பார்த்துதவ தக்கவள்தான்.
உத்திமிகச்சொல்வதல்லால் உத்தரவை மீறாள்காண்.
எத்திறத்தும் உம்மோ டிசைந்திடுவாள் ஏந்திழையாள்.
பேதமையும் மாதருக்கோர் பேரணியாம் என்றபடி
கோதைதறியாள்பொ ரப் கோள் கோபம் குற்றம் ஒன்றும்.
எவ்வேளை எவ்விடத்தில் எவ்வேலை செய்திடினும்.
அவ்வேளை அவ்விடத்தும் ஆமகளைத்தான் மறவாள்.
சொப்பனத்தில் தோன்றுவதும் தூய திருமேனி ஒன்றே.
இப்படியே மெய்மறந்தும் எண்ணல் உந்தம் சீர் சிறப்பே!

ஆதலால் தன்கணவன் ஆதரணசெயினும்
காதலாற் சீர்ப்படுத்தும் கன்னியிவள் என்றறிவீர்.
திருந்தவல்ல உத்தமியால் சீர்கேடனுந்திருந்தும்
கருத்துறுவான் என்பதற்கோர் கதை யுண்டு * சொல்லுகிறேன்
† [கேளீரல்லே.

1. ஓர் காலத்தோர் ஊரில் உத்தமனா மக்கள்மிக
நேராக ஏழாண்டு நேர்மையுடன் வாழ்கையிலே.

2 சேரா இடஞ்சேர்ந்த தீவினையாலே கணவன்
போரார் கண்ணால் மயக்கும் பொன்னி வலையிற்புகுந்தான்.

3. ஆளுக்குதன் ஆள்மறைக்கும் ஆசாடபூதி அன்பில்
நாளுக்குநாள் மூழ்கி நன்மை எல்லாந்தோற்றுவிட்டான்.

4. தாசிமனை தன் வீடாய்த் தக்கோரைக்கண்டாலும்
கூசிடான் அற்பருடன் கொண்டாட்டமாய்த்திரிந்தான்.

5. இத்தனைக்கும், வாழவந்தாள் ஏனென்றாள் அச்சத்தால்
சித்தம் திரும்பவகை செய்தாள் பணிவிடைகள்.

---

N. B.— * வாசித்து கதை சொல்லுக. † வாசித்து கதையை விட்டிட்டு, "இத்தகைய சீலம்" என்பதைத் தொடர்ந்து முடிக்க.

6. சித்தனைப்பூசித்தாள் கண்ணீரால் நரை மெழுகி,
பத்தியினைச்சோதித்த பான்மையினிச்சொல்லுகிறேன்:

7. "மந்திரத்தாலே விழுமோ மாங்காய்" என்றவ்வேசை
தந்திரத்தால் எல்லாம் தனக்காக்கவே துணிந்தாள்.

8. "என்னிடத்தில் மோகம்மிக வைத்துளன் என்றாலும் தன்
பன்னிகற்பில் மெத்தப்ப பரிவுடையான் என் செய்வேன்.

9. ஆனாலும் என்ன? என்னால் ஆகாததொன்றுளதோ?
தேனார் மொழிகற்பைத் தீவினையாலே சிதைப்பேன்.

10. என்று துணிந்து கற்பித்திட்டாள் இருகடிதம்:
ஒன்றுத்தமிகடிதம் போலும் இனிமற்றொன்று.

11. காவுபுருடன் கடிதம் போலும் இவள் கற்பித்தாள்,
இரண்டையுமே தான் கொடுத்தாள் யாரிடத்தில் என்றாலோ?

12 உத்தமிக்கு நித்தியம் வந்தூழியஞ் செய்வாள் ஒருத்தி
மத்தி மத்திலும் இழிந்த மாடத்தி கைக்கொடுத்து

13 போடுவித்தாள் முந்தினதைப் பொற்பாசி பெட்டியிலே
"தோடுவித்தேனும்உனக்குத் தொண்ணூறு பொன்றருவேன்.

14. மற்றிக்கடிதம் உன்றன் மடியிலிருந்து வீழ்வது போல்
சுற்றித்துணியில் வைத்துத் தோழன் முன்னே வீழ்த்து
[வையேல்."

15. என்றது கேட்டவ்வாறியற்ற இசைந்தாள் கிழவி
நன்றறியாப் பேதையர்செய் நன்றி கோலஞ் சுவரோ!

16. அப்பால், பரத்தை அந்தப்பேயனிடஞ் சொல்லுகிறாள்:
"இப்பாவி சொன்னதெல்லாம் ஏற்காதே உங்களுக்கு.

17. கண்ணாரக்கண்டபின்பு கட்டழகி சொற்பலிக்கும்
கண்ணானார் கைக்கடிதம் கைப்பெட்டிக்குள்ளிருக்கும்.

18. சோதித்தால் உண்மை துலங்கும்" என்றாள் சூதுடையாள்.
போதித்தவாறே புகுந்திட்டான் உள் அறையில்.

19. பார்த்தான் பரமார்த்தன் பத்தினியின் பெட்டியிலே
பார்த்தான் கடிதம் படித்தான்பின் வாக்கியத்தை:

20. "சுத்து மணி தரித்த தோழன் வெளியானபின்பு
பத்து மணிக்குச்சரியாய்ப் பார்ப்பா யுன் வீட்டில் எனை"

21. வேர்த்தான் விறுவிறுத்தான் வெட்டுவேன் என்றெழுந்தான்
ஆர்த்தரவஞ் செய்யாதடக்கினான் மூள் சினத்தை

22. "கொஞ்சநேரம் பொறுத்துக் கூடவரும் கள்வனையும்"
அஞ்சாமலே நான் அரை நொடியில் வெட்டிடுவேன்

23. என்று மனத்துள் உரைத்தங் கெப்போதும் போவதுபோல்
அன்றும் வெளி ஏறிவந்தான் அப்பால் நடந்ததிது:

24. வீட்டின் விலாப்புறத்தில் வீசு காற்றோட்டவழி
காட்டிவிடும் உள் நிகழும் காரியங்கள் அத்தனையும்

25. ஏற்ற இடத்தில் இருந்து கொண்டான் பக்குவமாய்
வேற்றாளைக்காண்பான் வெகு நேரங்காத்திருந்தான்

26. காயிதத்திற்கண்ட கடிகை வரும் வரையும்
ஆயுதத்தைத்தீட்டியவன் அவ்விடத்தே காத்திருந்தான்

27. நள்ளிராப் போதாயும் நாயும் வரக்கண்டிலனே
பிள்ளைவிழித்துப் பசியாற் பேரிரைச்சலிட்டழுதான்

28. அன்னை எழுந்தவனுக்கன்னம் கொடுக்கலுற்றாள்.
அன்னையழக்கண்டவன் "நீர் ஏன் அழுவீர்! சொல்லும் அம்மா

29. 'அப்பாவைக்காணம்' என்றோ? அவர்க்கா அழுவானேன்?
அப்பா தான் உம்மை அடித்துதைத்து வைதாரே!

30. உங்கள் அப்பா, மாமா உதவி செய்யப் போதாதா?
எங்களுக்கெங்கப்பாவால் என்னபலன் மாதாவே!"

31. என்று தெளிவாய் எடுத்துரைத்தான் உள்ளதெல்லாம்
நன்றுணர்ந்து தீய தெண்ணு நன்மனையாள் எதுரைப்பாள்!

32. "அப்படி எல்லாம் நீ அலட்டாதே கண்மணியே!
எப்படியார் செய்தாலும் அப்பாவை ஒப்பாரோ?

33. அப்பாவுக்காக நாம் ஆண்டவனை வேண்டுவம்" என்ற
இப்பால் மொழியோடங்கீர் அருவி தோன்றினவே.

34. கள்ளமனந்துள்ளும் என்ற கட்டுரைதான் பொய்த்திடுமோ?
மெள்ள எழுந்தக்கிழவி "என் அழுதீர் விம்மி" என்றாள்.

35. அப்பொழுது பையனும் பார்த்தன்னையிடம் சொல்லுகிறான்
இப்பகல் இம்மாடத்தி லேதோ ஒரு கடிதம்

36. வைத்தாள் உம்பெட்டி" என வாய்விட்டுரைக்குமுன்னே
பித்தானாற் போற் கிழவி வாய் குழறி மெய்விதிர்த்தாள்.

37. கேட்டிருந்த வீரன்நெஞ்சங் கீழ்மாறி நின்றாக
வீட்டிற்குள் ஓடிவந்தான் வீழ்ந்தான் தன் மாதடியில்

38. மேனிகழுந்த வெல்லாம் விளம்பல் மிகையாமே:
நானிலத்தாரும்புகழ நன்னயமாய் வாழ்ந்தனர்காண்.

---

இத்தகைய சீலம் இவட்கியல்பா யுள்ளதுகாண்.
பத்தி சோதிப்பனெனப் பார்த்தல் அறிவாகாதே.

---

பாதியுடல் பார்வதியாய்ப் பாதிபரமேசுரனாய்
நீதியுடன் வாழ்வர் எனும் நேர்மையுரை நன்குணர்வீர்!
நெடுமால்தன் நெஞ்சில் வைத்தார் நேரிழையாள் லட்சுமியை
விடுவோரலர் என்பார் மேன்மையுரை நன்குணர்வீர்!
மெல்லியலின் கல்வி நலம் வேதன் அறிந்தேநாவில்
சொல்லணங்கை வைத்ததெனச் சொல்லுமுறை, நன்குணர்வீர்.

---

வாழ்த்துகிறோம் வாழ்த்துகிறோம் மாப்பிள்ளையும் பெண்ணையுங்காய்
வாழ்த்துகிறோம் என்றென்றும் மங்களமாய் வாழ்வீரே!

---

திருமணவாழ்த்து முற்றிற்று.